1971 டிசம்பர் 11]

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் உற்பத்தியாகின்ற பழவகைகள் அயல்நாடுகளிலேயிருந்து நமக்கு அந்நியச் செலாவணியினை ஈட்டுகின்ற வகையிலே இருக்கின்றன. காஷ்மீர் போன்ற மாநிலங்களிலே உள்ளவர்கள் அயல்நாடுகளிலே இருக்கின்ற தூதுவர்களோடு தொடர்புகொண்டு அவர்களுடைய துணையுடன் ஆங்காங்கு ஷோ ரூம்ஸ் வைத்து பழவகைகளுக்கு நல்ல விளம்பரம் கொடுத்து விற்பனை பெருகியிருக்கிறது. அதைப்போன்று நம்முடைய மாநில அரசாங்கமும் மத்திய அரசின் துணையுடன் அந்த அந்த நாடுகளில் உள்ள தூதுவர்களோடு தொடர்புகொண்டு நம் தமிழகத்தில் உற்பத்தியாகும் பழவிற்பனையை அதிகப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் ஆரஞ்சுப் பழம் ஏற்றுமதி செய்யப்படும் அளவிற்கு அதிகமாக இல்லை, மைசூர், கூர்க் முதலிய இடங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஆரஞ்சு சென்னைத் துறைமுக வாயிலாக வெளிநாடுகளுக்கு அனுப்படுகின்றது. 1970-71, 1971-72 ஆம் ஆண்டுகளில் வேறு எந்தவிதமான பழங்களும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. பழ அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திராட்சை பயிரிட, ஒரு ஏக்கருக்கு ரூ. 1,500 விதம் ஒரு நபருக்கு ரூ. 6,000 மேற்படாமலும், மற்ற பழங்கள் பயிரிட, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 விதம் ஒரு நபருக்கு ரூ. 2,000-க்கு மேற்படாமலும் நீண்டகாலக் கடன்கள் வழங்கப்படுகின்றன. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைப் பொறுத்தவரையில் சீனு, பார்மோசா, ஆஸ்திரேலியா, இஸ்ரேல், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து ஆரஞ்சுப் பழத்தை சிங்கப்பூர் சந்தையில் விற்பனை செய்ய போட்டி அதிகமாக உள்ளது. வெளிநாட்டு வியாபாரிகள் பழத்திற்குரிய தொகையை வாங்குவோரிடத்து விற்ற பின்பே செலுத்துகிறார்கள். மேலும் இப்பழங்கள் எளிதில் அழியும் தன்மைவாய்ந்தவை. ஆகவே உடனடியாகச் செய்வதற்கு இயலாது.

Fruit Preservation Unit in Coimbatore.

* 285 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of Government to open a fruit preservation unit in Coimbatore; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் பழத்தோட்டங்கள்.

* 286 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழத்தோட்ட அபிவிருத்தி (Horticultural Development Scheme)) திட்டத்தின் கீழ் வட ஆர்க்காடு மாவட்டத்தில் சென்ற ஆண்டு எவ்வளவு பேருக்கு எவ்வளவு கடன் தொகை அளிக்கப்பட்டது ?

(இ) எத்தனை ஏக்கரில் பழத்தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) தோட்ட வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1970-71-ல் 60 பேருக்கு ரூ. 62,500 கடனுகை வழங்கப்பட்டது.

(இ) மொத்தப் பரப்பளவு 140 ஏக்கர்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூரிலே பழப் பதனிடும் தொழிற்சாலை இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக்குப் போதிய பழங்கள் கிடைக்கவில்லை. எனவே பழம் உற்பத்திச் செய்யும் தோப்புகளை அதிகமாக ஏற்படுத்துவதற்கு அரசு மானியத் தொகையும், கடன் தொகையும் அதிகமாகக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பழ உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது. புதிய பழத்தோட்டங்கள் அமைப்பதற்காக நீண்டகாலக் கடன் வழங்குவதன்மூலம் பழ உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது. பழத்தோட்ட வளர்ச்சி சிறப்புப் பணியாளர்களின் இடைவிடா முயற்சியின் காரணமாக, பழத் தோட்டப் பரப்பளவும் பழ உற்பத்தியும் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்தன. ரூ. 13 லட்சம் நீண்ட காலக் கடன் வழங்கியதின் வாயிலாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கூடுதலாக 4,350 ஏக்கரில் பழத்தோட்டங்கள் உண்டாக்கப்பட்டன. பழத்தோட்டங்கள் உண்டாக்க உயர்ந்த அளவு ரூ. 2,000 என்ற வரையறைக்கு உட்பட்டு ஒவ்வொருவருக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 என்ற வீதத்தில் நீண்டகாலக் கடன் வழங்கப்படுகின்றது. திராட்சைப் பழத் தோட்டங்கள் உண்டாக்க ஒருவருக்கு உயர்ந்த அளவு ரூ. 6,000 என்ற வரையறைக்கு உட்பட்டு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 நீண்டகாலக் கடன் வழங்கப்படுகின்றது.

திரு. தொ. ப. சீனிவாசன் : பழத்தோட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகப் பராமரிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது ஊராட்சிகளின் மூலம் பராமரிக்கப்படுவதால் சரியான பராமரிப்புச் செய்யமுடியாததால் அவை பாழாக்கப்பட்டுவிடுகின்றது. எனவே, ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக அவைகளைப் பராமரிப்புச் செய்ய அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அவர்களே பாழாக்கப்பட்டுவிடுகின்றது என்று சொன்னார்கள். எனவே, மேலும் பாழாக்க அரசாங்கம் விரும்பவில்லை.

Banana cultivation in Dharmapuri district.

* 287 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal to bring more area under expert type of banana cultivation in Dharmapuri district; and

(b) if so, when it will be implemented?